# பெத்லகேம் குறவஞ்சியில் மலைவளம்

*முனைவர் அ. பாரதிராணி*
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி

***ஆய்வுச்சுருக்கம்***

*வளம் நிறைந்த பகுதியாக வலம் வருவது தமிழரின் தொன்மை. வேதநாயக சாஸ்திரியால் உலகிற்கு அளிக்கப்பட்ட ஒப்பற்ற நூல் பெத்லகேம் குறவஞ்சியாகும். இந்நூல் சிற்றிலக்கிய வகைகளுல் ஒன்றானது என்பதை அதன் கட்டமைப்புகள் எடுத்துரைக்கின்றன. இக்குறவஞ்சியில் எடுத்துரைக்கப்படும் மலை வளம் குறித்து விளக்குவதே இக்கட்டுரையின் சாரமாக அமைந்துள்ளது.*

***திறவுச்சொற்கள்:*** *மாசா, மெரிபா–(வாதாடுதல்) – எபிரேயச்சொல், மோசேசு – மோய்சன், வஞ்சி*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6410

## முன்னுரை

பதினெட்டு உறுப்புக்களைக் கொண்ட பல்வேறு கலம்பக நூல்களில் “குறம்” என்ற உறுப்பும் ஒன்றாகும். அவ்வகையின் கீழ் குறவஞ்சி சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். “வஞ்சி” என்றால் பெண் எனப் பொருள்படும். குறவஞ்சி என்பது மலையில் வாழும் குறப்பெண் என்று பொருள் தருகிறது. குறவஞ்சி இலக்கியத்தின் தலைவி சாதாரண மங்கையாகவும், தலைவன் கடவுளாகவும் அல்லது மன்னராகவும் கொண்டு படைக்கப்படுவது அதன் மரபாகும். இவ்வகையில் திரிகூடராசப்ப கவிராயரின் குற்றாலக் குறவஞ்சியை அடியொற்றி எழுதப்பட்டதே பெத்லகேம் குறவஞ்சியாகும்.

## குறவஞ்சியின் சிறப்பு

தலைவியால் காதலிக்கப்பட்டத் தலைவனின் தன்மையினை எடுத்துக் கூறி, அவனை அடைதல் உறுதி என்று குறியின் வழி குறத்தி விளக்கி நிற்பாள். அவ்வாறு குறிதேர்ந்து கூறும் குறத்தி தன் குலப்பெருமையினையும், நாட்டு, நகர் வளங்களையும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற கால நிகழ்வினையையும் திறம்படத் தன் சொல் வலிமையால் எடுத்துரைப்பதே குறவஞ்சிப்பாடல் எனப் பன்னிருப்பாட்டியல் விளக்குகிறது.

இம்முறைகளின் வழியில் பெத்லகேம் குறவஞ்சியும் குறவஞ்சியின் அமைப்பு முறைகளின் கட்டுக்குள்ளிருந்து விலகாமல் வளம் சேர்ந்துள்ளது.

**பெத்லகேம் குறவஞ்சி உருவாகக் காரணமும், கட்டமைப்பும்**

குற்றாலக் குறவஞ்சி நாடகம் இசையுடன் கலந்து இனிக்கும் சாறு. இந்நூலின் சிறப்பினை உணர்ந்த தமிழர்கள் நாடகவடிவில் உள்ள கருத்தினை மக்களுக்குத் தெரிவித்து வந்தனர். அவ்வகையில் குற்றாலக் குறவஞ்சி நாடகம் "தஞ்சையைச் சுற்றியுள்ள கிராமங்களில் நவராத்திரியன்று நடத்தப்பட்டது. இதனை அறிந்த வேதநாயசாஸ்திரியார் அந்த நூலைத் தழுவி பெத்தலகேம் குறவஞ்சி நூலைத் தம் இருபத்தைந்தாம் வயதில் 1800ஆம் ஆண்டு எழுதினார்"[1] என்பார் புலவர் சே.சுந்தரராசன். (பெத்லகேம் குறவஞ்சி முன்னுரை). குறவஞ்சி நூல்களில் மிகப் பெரியது பெத்லகேம் குறவஞ்சியாகும். இந்நூல்தான் சாஸ்திரியாருக்கும் பெருமையையும், மேன்மையும், புகழினையும் தேடித் தந்தது என்பர்.

இந்நூல் மூன்று கட்டமைப்புகளைக் கொண்டது. திருமுழுக்கு யோவானின் அருளுரை, இயேசு பெருமகனாரின் சிறப்பு, சீயோன் மகள் குறித்த விளக்கம், இவளுடைய பந்தாட்டம் என்பது முதல் பிரிவாகவும், இரண்டாம் பகுதியில் பெத்லகேம் மலையில் பிறந்த குறவஞ்சியின் தோற்றம், சீயோன் மகளிடம் உரைக்கும் இயேசுவின் சிறப்பு, உலா வரும் நாயகனை நீர் மணம் செய்வீர் என்று நம்பிக்கையும், கானான் தேசத்து வளத்தையும், திருமறை கூறும் மலையின் சிறப்பு குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் பகுதியில் இறைமகனின் சிறப்புகளை குறத்தியான சிங்கியும், குறவனான சிங்கனும் தன் உரையாடல்களின் வழி எடுத்துரைப்பதும், மக்களாகிய பறவைகளை நற்செய்திகளின் வழி பிடிக்கும் முறையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பாயிரம் தொடங்கி வாழ்த்து என முடியும் 72 தலைப்புகளின் வழி சாஸ்திரியார் இறைமகனின் பெருமைனளை விதைத்துள்ளார்.

**வளமும் அதன் வகைப்பாடும்**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் இயற்கைச்சக்திகளையே வளம் என்றுரைப்பர். நாட்டு வளமும், நகரின் வளமும் உரைப்பது பனுவல்களின் பாங்கமைவு. சங்க இலக்கியங்கள் ஐவகை நிலத்தின் அருமைப்பாட்டினை, வளத்தினை எடுத்துரைத்துள்ளன. காப்பியங்கள் ஊரின் சிறப்பினையும், நகரின் சிறப்பினையும் அழகுடன் எடுத்தியம்பியுள்ளன. சிற்றிலக்கியங்களிலும் இவ்வாறு மலை, நகர், நாடு எனப் பல்வேறு வளங்கள் பற்றி நூலாசிரியர்கள் சிறப்பாக விளக்கியுள்ளனர். இவ்வரிசையில் பெத்லகேம் குறவஞ்சி வளங்கள் குறித்து வேதநாயக சாஸ்திரியார் திறம்பட விளக்கிச் செல்கின்றார்.

பெத்லகேம் குறவஞ்சியில் மலைவளம், நாட்டு வளம், தலவளம், குலவளம், வாசல் வளம், தேசவளம், வித்தை வளம், குறிவளம், சிங்கன் வளம், மந்திர வளம், நூவன்வளம், மூலிகை வளம் என பன்னிரெண்டு வகையான வளங்கள் விளம்பப்பட்டுள்ளன. அவற்றில் மலைவளம் குறித்தும் அவை உரைக்கும் கருத்தாழம் குறித்தும் இவ்வாய்வு தெளிவு படுத்த விழைகிறது.

**மலைவளம்**

இயற்கையின் அழகை அள்ளி இறைத்தல் மலை. மலைவளத்தாலே மானிட வாழ்க்கை மலர்ச்சி கொண்டுள்ளது. மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி எனச் சிறப்பிக்கப் படுவதற்கான காரணமும் மலைவளமே. "குறிஞ்சிக்கோர் கபிலர்" என்று சான்றோர்களால் புகழப்படும் கபிலர் குறிஞ்சிக்குரிய மலைவளத்தை முதல் பொருளும், கருப்பொருள், உரிப்பொருள் என்ற வகைப்பாடுகளின் வழி தெற்றென விளக்கியுள்ளார்.

குறவஞ்சி சீயோன் குமாரத்தியைப் பார்த்து உன் மிகுந்த அறிவுமலை எது? அதைப்பற்றி உரைப்பாயே என்று கேட்க அதற்கு மறுமொழியாய் சீயோன் மகளும் தன் மலைவளம் குறித்துப் பதிவு செய்கிறாள்.

விண்ணவர்கள் ஒருங்கே வந்து இறைவனின் சிறப்புகளை வாழ்த்திப் புகழ்வர், சித்தர்கள் வழிபாடு செய்வர், முல்லை நிலத் தலைவர்கள் அறிவுடன் வணங்குவர், வானியல் ஆராயும் அறிஞர்கள் காணிக்கை படைப்பர். கொடையாளர்கள் வாழும் மலை. தீமையான, கொடிய குற்றம் நெருங்காமலை இழிவான பேய்க் கூட்டங்கள் செய்வது அறியாது துடிக்கும் மலை. எல்லாவற்றிலும் மேலாக இறைவன் இயேசுவின் இடமானது எங்கள் மலை என்று உரைக்கிறார். இதனை,

**"வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பர்**
**வண்மையுள்ள சித்தரெல்லாம் அருந்தவங்கள் பிடிப்பார்**
**ஞானமுடன் முல்லைநிலத் தலைவர்வந்து தொழுவார்**
**நட்சேத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்**
**தானதர்மம் ஏழைகட்டு யாவர்களுங் கொடுப்பார்**
**சண்டாளப் பாவமெல்லாம் அண்டாது தடுப்பார்**
**ஈனமுள்ள பேய்க் கணங்கள் மயங்கியங்கே துடிப்பர்**
**ஏகன்மனு வானவெல்லை யெங்கள் மலையம்மே"**

**(பெத்.குற.பா.எ.323)**

என்ற அடிகளின் வழி உணர்த்துகிறார் வேதநாயக சாஸ்திரியார். இப்பாடலின் தொடக்கமும் சந்தநயமும் திரிகூட ராசப்பரின்,

**"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழி எறிந்து வானவரை அழைப்பர்**
**கமன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்**
**தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**
**கூனிளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்**
**குற்றாலத்திரிகூட மலையெங்கள் மலையே"[2]**

என்ற குற்றாலக் குறவஞ்சியின் அடிகளை நினைவிற்குள் நிறுத்துகிறது.

### ஏதேன் மலையும் பெத்லேகேம் மலையும்

சீயோன் மகளுக்குப் பதிலுரையாக குறவஞ்சி தன்நாட்டு மலைவளத்ததை மகிழ்வுடன் உரைக்கின்றாள். குறவரின் ஆதிகால மலை ஏதேன் மலையென்றும், அது இறைவனால் அமைக்கப்பட்டது என்றும், அறம், பொருள், இன்பம், வீடு பேறு என்ற நான்கு உறுதிப்பொருள்களும் இறைவனால் அம்மலையில் கொடுக்கப்பட்டது என்றும், பேய் சாதித்த மலையும் அதுவே, கீழ்படியாமையால் இறைவன் சபித்த மலையும் அதுவே என்று மகிழ்வும் வருத்தமும் ஒன்றாக இணைத்து எடுத்துரைக்கின்றாள் குறவஞ்சி. இக்கருத்தினை,

**"ஆதிமலை எங்களுக்கோ ஏதன் மலையம்மே!**
**ஆண்டவனா ரெங்களைத்தானமைத்த மலையம்மே!**
**நீதியென்ற நால்வரமும் கொடுத்த மலையம்மே!**
**நித்தியமும் சாகாமல் நின்றமலையம்மே!**
**சாதனையாய்ப் பேய்பிறகு கெடுத்தமலையம்மே!**
**தற்பரனா ரெம்மையங்கே சபித்தமலையம்மே!"**

**(பெத்.குற.வ.பா.எ.324)**

என்ற வரிகள் விளக்கி நிற்கின்றன. இறைவன் சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தால் ஏதேன் மலையை விட்டு குறவர் இனமக்கள் வேறுமலை நாடுகின்றனர். அவ்வாறு வேறுபாட்டால் மாறிய மலை பெரியமலை. அதுவே பெத்லகேம் மலை என்பதை,

**"பேதகமாய் நாங்களதை விட்டதற் பின்னம்மே**
**பெத்தலேக மெங்களுக்குப் பெரிய மலையம்மே"**

**(பெத்.குற.வ.பா.எ.324,7,8)**

என்றும் மொழிகிறாள் குறவஞ்சி.

### நால்வகை மலையின் சிறப்பு

விவிலியக் குறிப்புகளை உள்ளடக்கி ஒவ்வொரு மலைகளின் சிறப்பையும் எடுத்துரைக்கும் சாஸ்திரியார். அறராத்து மலை, மோரியா மலை, சீனாய் மலை என மூன்று மலைகளின் சிறப்பையும் உணர்த்திச் செல்கின்றார்.

மழை பொழிந்து வெள்ளத்தால் அழிவுற்ற உலகத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் பொறுப்பினை இறைமகன் நோவாவிடம் ஒப்படைத்தார் என்பது மறைநூலின் வெளிப்பாடு. "கடவுள் நோவாவையும் அவருடன் பேழைக்குள் இருந்த எல்லாக் காட்டு விலங்குகள், கால்நடைகள் அனைத்தையும் நினைவு கூர்ந்தார். வெள்ளம் விடிந்தது. ஏழாம் மாதத்தில் பதினேழாம் நாளன்று அறராத்து மலைத் தொடர்மேல் பேழை தங்கியது"[3] (தொடக்க நூல் பக்.2) என்ற தொடக்க நூலிலும் சான்று பகரப்படும் நோவாவின் பேழை தங்கிய மலை அறராத்து மலையாகும்.

அத்தகு திறமுடைய நோவாவின் மலையான அறராத்து மலையினைக் குறிக்கிறது பெத்தலகேம் குறவஞ்சி.

**"ஆரியனா ராத்துமலை நோவை மலையம்மே**
**அற்புதமாய் பேழைவந்து நின்ற மலையம்மே"**
**(பெத்.குற.வ.பா.எ.325,1-2)**

என்று சுட்டுகிறது.

ஆபிரகாமின் அன்பிற்குரிய மகனான ஈசாக்கை இறைவன் உயர்ப்பலி கேட்கின்றார். எவ்விதமான சலனமும், வருத்தமும் இன்றி ஈசாக்கைப் பலியிட ஆபிரகாம் முன்னேறுகின்றார்.

**"சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"[4]**
**(புறம்.பா.எ.312)**

என்ற புறநானூற்றின் தந்தையாய் வாழ விரும்பும் ஆபிரகாம் இறை பணிதலுக்குப் பணிந்து நிற்கின்றார். "நீ அன்பு கூறும் உன் ஒரே மகன் ஈசாக்கை அழைத்துக் கொண்டு மோரியா மலைப் பகுதிக்குச் செல். ஆபிரகாம் தம் மகனை வெட்டுமாறு தம் கையை நீட்டிக் கத்தியைக் கையிலெடுத்தார்"5 (தொடக்க நூல் 22:2,10-பக் 4) என்று ஆதிஆகமம் கூறுகின்ற தரவுகளின் வழி, ஈசாக்கைப் பலியிடச் சென்ற நிகழ்வு குறவஞ்சியில் ஈண்டு உரைக்கப்பட்டுள்ளது.

**"மோரியாவின் மலைதனிலே ஆபிரகாமம்மே**
**முக்கியமான யீசாக்கைப் பலிகொடுத்தானம்மே"**
**(பெத்.கு.வ.பா.எ.325-3,4)**

ஈசாக்கை ஆபிரகாம் பலியிடத்துணிந்த மலை மோரியா மலை என்பது இங்கே அறிவுறுத்தப்படுகின்றது.

மோரிபா என்றும் மாசா என்றும் அழைக்கப்படும் மலையின் சிறப்பும் இங்கு முன்வைக்கப்படுகிறது. மோசே எகிப்தில் இருந்து இஸ்ரேயல் மக்களை அழைத்துக் கொண்டு பாலை நிலத்திலிருந்து பயணத்தைத் தொடங்கினார். அவ்வாறு செல்லும்போது மக்கள் தண்ணீர் இன்றி தாகத்துடன் தடுமாற்றம் கண்டனர். மோசேயிடம் முறையிட அவர் இறையை நாட அங்கே வியப்பு நிகழ்ந்தது. மோசேயின் கையில் உள்ள கோலால் பாறையைத் தட்ட மக்கள் அருந்திட நீர் பெருக்கெடுத்தது. இதனை யாத்ராகமம் எடுத்து மொழிகின்றது. "இஸ்ரேயல் மக்கள் அங்கு வாதாடியதாலும், ஆண்டவர் தம்மோடு இருக்கிறாரா இல்லையா என்று சோதித்ததால் அவ்விடம்சுசுமாசாசுசு என்றும் "மெரிபா" என்றும் பெயரிட்டழைக்கப்பட்டது"[6] (யாத்.17:7-பக்87)என்ற விவிலிய ஆகமத்தை உள்வாங்கிய ஆசிரியர்,

**"மோரிபாவை மோசேசு பிரம்பு கொண்டேயடிக்க**
**மெத்த வெள்ள மானவிதம் சித்திரங்காணம்மே"**
**(பெத்.கு.பா.எ.325:5,6)**

என்று மேரிபா மலையின் சிறப்பினை வெளிப்படுத்துகின்றார். பத்துக் கட்டளை களைகள் தோன்றிய மலை சீனாய் மலை என்றும், நேர்மையான அறமலை பெத்தலகேம் மலையென்றும் பாடுகிறார் குறத்தி. இதனை,

**"நேரிலுயர் கற்பனையின் மலையது தான் சீனா**
**நேர்மைபடுத்த உலகமெங்கள்நீதிமலையம்மே"**
**(பெத்.குற.பா.328:7,8)**

என்ற பாடல் வரிகள் உயர்த்திப் பிடிக்கின்றன.

## தகுதியானமலை பெத்தலகேம்

பலவிதமான மலைகளை எடுத்துரைக்கும் குறவஞ்சி பெத்தலகேம் மலையே தகுதியான மலை என்று உறுதி கூறுகிறார். ஏனென்றால்

ஏதோமின் எல்லையில் ஓர் மலையுள்ளது என்றும், ஆரோன் மரித்த மலை ஒன்றுண்டு எனவும், பிஸ்கா மலையில் ஏறியே கானான் தேசத்தை மோசே கண்டார் எனவும், நோபோ மலையே மோசே மரணமடைந்த மலையென்றும் கூறி பின் புதுமை சூழ் மலையாக பெத்தலகேம் மலை இருப்பதால் அதுவே தகுதியான மலை என்று மொழிகிறார். இக்கருத்தினை நூலாசிரியர்,

**"ஓர் மலையோ ஏதோமினெல்லை மலையம்மே**
**உச்சிதமா யாறோனு மரித்தமலையம்மே**
**கார்முகில்சூழ் பிஸ்காவின் கொடுமுடியிலேறிக்**
**கானாவை மோசேசு கண்ட மலையம்மே**
**நேர்மிகுந்த மோவாப்பின் தேசமதிலிருக்கும்**
**நோயேக்குன் றவன்மரித்த மலைதான் காணம்மே**
**யேர்மோனின் மலையினிலே யேவியர் முன்னிருந்தாய்**
**எங்களுக்குப் பெத்தலேக மேற்ற மலையம்மே"**

**(பெத்.கு.பா.எ.328)**

என்ற பாடல் வழி விளக்குகின்றார்.

### சீயோன் மலையின் சிறப்பு

பொலிவு மிகுந்த, திருச்சபை மக்கள் குடியேறிய, ஒழுக்கம் உள்ள பெண் துறவிகள் வாழுகின்ற மலை என்று சீயோன் மலை சிறப்பிக்கப்படுகின்றது. இக்கூற்றினை,

**"அற்புதசீயோன்மலைதான்பொற்புமலையம்மே**
**ஆட்டுக்குட்டி மனைவிகுடி யான மலையம்மே**
**கற்புளகன் னியாய்திரீகள் வாழுமலையம்மே**
**காரணர்க்குக் கலியாண மாடுமலையம்மே""**

**(பெத்.கு.பா.எ.332)**

என்று செய்யுள் அடிகள் விளக்கியுரைக்கின்றன. மேலும், இயேசுவின் துன்பத்தை அறிந்த மலை, கொல்கதா மலையென்றும், அவர் பாடுபட்டு மறித்ததும் அம்மலையாகும் என்பதையும்

**"பற்பலபா டானமலை கொல்கதாத்தானம்மே**
**பரண்சுதனார்பாடுபட்டுமரித்தமலையம்மே"**

**(பெத்.கு.பா.எ.332)**

என்ற தொடர்கள் எடுத்துக்காட்டுகின்றன. சுதன் என்பது இறைமகன் இயேசுவையே குறிக்கின்றது. இப்பாடல் குற்றாலக் குறவஞ்சியின் கீழ்க்கண்ட பாடலை நினைவுட்டுகிறது.

**"கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே**
**கொழுநனுக்குக் காணிமலை பழனிமலை அம்மே**
**எல்லுலவும் விந்தை மலை எந்தைமலை அம்மே**
**இமயமலை என்னுடைய தமையன் மலையம்மே**
**சொல்லறிய சாயிமலை மாயிமலை அம்மே**
**தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே**
**செல்இனங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்**
**திரிகூடமலை யெங்கள் செல்வமலை அம்மே"[7]**

இப்பாடலில் குறிக்கப்படும் குறவஞ்சியின் மலைப்பிரிவு குறிஞ்சி மக்களின் மேன்மையை முன்னிறுத்துகிறது.

### சீரான மலைகள்

பாம்பின் பேச்சைக் கேட்டு ஏவாள் ஏமாற்றம் கண்டாள். அதன் விளைவாக ஆதாமும் தண்டனை பெற்றான். அப்படிப் பட்ட பாவ மலை ஏதேன் மலையாகும். அதன் காரணமாகவே மணவாளனாய் இறைமைந்தனுக்கு சீயோனின் மகளைத் திருமணம் செய்து முடித்துக் கொடுத்தோம். அதனால் எருசலேம் மலையுடன் நாட்டில் உள்ள பல்வேறு மலைகளைச் சீர்வரிசையாகக் கொடுத்த நிகழ்வினை பெத்தலகேம் குறவஞ்சி சிறப்பாய் எடுத்து மொழிந்துள்ளன. இக்காட்சியினை,

**"பெண்ணானபாம்புவென்றநாகமுந்தானம்மே**
**பெரியோனின் பேரைவைத்து விபசாரியானாள்**
**வண்ணமிதால் ஞானமண வாளனுக்குச் சீயோன்**
**மகள் தனையுங் கலியான மாய்முகித்துக்**
**கொடுத்தேன்**
**திண்ணமுடன் புதுஎருச லேமலையு மற்றத்**
**தேசமதின் மலைகளெல்லாம் சீதனமாய்க்**
**கொடுத்தாய்"**

***(பெத்.கு.பா.எ.334)***

என்று கண்முன் நிறுத்துகிறது பெத்தலகேம் குறவஞ்சி. பெண்களுக்கு மணமான பின் சீர்வரிசை கொடுக்கும் மரபினை மலை வழி அடிக்கிச் செல்கிறார் ஆசிரியர். ஆயினும் அறமலையாகப் பெத்தலகேம் மலை இங்கே நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

வேதநாயக சாஸ்திரியாரின் பெத்லகேம் குறவஞ்சி 72 தலைப்புகளை உள்ளடக்கி இயேசு பெருமகனாரின் வாழ்வியலை விளக்கியுள்ளது.

12 வகையான வளங்களை எடுத்து விளம்பும் பேழையாக இந்நூல் முதன்மை நிலை பெற்றுள்ளது.

"குறவஞ்சி" என்ற சிற்றிலக்கிய கட்டமைப்புகளைத் தெற்றெனப் பெற்றுள்ளது.

பல்வேறு வகையான மலைகளை கிறிஸ்து பெருமானின் வாழ்வியலோடு ஒப்பிட்டு எடுத்தாண்டுள்ளது.

மலைகள் பலவாக இருப்பினும் பெத்தலகேம் மலையை மட்டுமே அறமலையென்றும், பெரிய மலையென்றும், நீதிமலை என்றும் குறவஞ்சி சிறப்பித்து உரைக்கின்றாள்.

கிறிஸ்தவர்களின் பயணங்களில் மலைகளின் பங்கு எத்தகு திறம் வாய்ந்தது என்பதையும் இந்நூல் சுட்டிக்காட்டியுள்ளது.

திருமண முறையில் சீர் செய்யும் வழக்கம் உள்ளதை இந்நூல் சுட்டுவதுடன் மலைவாழ் குறவர்களின் சீராகப் பெண்களுக்கு மலைகளே கொடுக்கப்படுவதும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை எழிலைக் கற்பனையுடன் கலந்து உரைக்காமல் விவிலியக் கருத்துகளுடன் மலையினை ஒப்பிட்டு உரைக்கும் பாங்கு இங்கு நோக்கத்தக்கதாகும்.

குற்றாலக் குறவஞ்சியின் சொல்லாடல்கள், சந்தநயங்கள், கருத்துரைக்கும் பாங்கு போன்றவை பெத்தலகேம் குறவஞ்சியில் மாற்றமின்றி கையாளப்பட்டுள்ளது.

மேலாய்வுக் களங்களாக ஒப்பிட்டுப் பார்வையில் குற்றாலக் குறவஞ்சி, பெத்தலகேம் குறவஞ்சி ஆகிய இருநூல்களையும் நிரல்படுத்தலாம்.

## துணைநூற் பட்டியல்


1. சே.சுந்தரராசன் - பெத்லகேம் குறவஞ்சி உரையுடன் - மோனார்க் அச்சகம், பெரியார் பாதை, சென்னை - 2009.
2. புலியூர் கேசிகள் - திருக்குற்றாலக் குறவஞ்சி - சாராதா பதிப்பகம்.
3. திருவிவிலியம் - தொடக்கநூல் - ஆயர் சூசைமாணிக்கம் - தமிழ்நாடு பிபிளிக்கல் - திண்டிவனம் 1.
4. அ.மா.பரிமணம் - புறநானூறு - நீயு சென்சுரி புக் ஹவுஸ் சென்னை.
5. திருவிவிலியம் - ஆயர் சூசைமாணிக்கம் - தமிழ்நாடு பிபிளிக்கல் - திண்டிவனம் 1.
6. அ.மா.பரிமணம் - புறநானூறு - நீயு சென்சுரி புக் ஹவுஸ் சென்னை.
7. புலியூர் கேசிகள் - திருக்குற்றாலக் குறவஞ்சி - சாராதா பதிப்பகம்.